**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமை பிரசங்கம்**
**28 பிப்ரவரி 2020 / 04 ரஜப் ஹிஜிர் 1441**

# ஆன்மீகம் மற்றும் உடலியல் பரிசுத்தம்

**الحَمدُ للهِ الَّذِي جَعَلَ شَهرَكُم هَذَا شَهرَ الحَرَام، ، فَطُوبَى لِمَن اغتَنَمَ فَضْلَ هَذِهِ الأَيَّام، وَأَشهَدُ أَن لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحدَهُ لاَ شَرِيكَ لَهُ المُتَعَالِي عَن إِحَاطَةِ الجِهَاتِ، وَأَشهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبدُهُ وَرَسُولُهُ بَعَثَهُ إِلَى خَيرِ أُمَّة، اللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحبِهِ وَسَلِّم صَلاةً نَنَالُ بِهَا القُرْبَ وَالشَّفَاعَةَ.**
**أَمَّا بَعدُ، فَيَا أَيُّهَا المُسْلِمُونَ، اِتَّقُوا اللهَ، أُوصِيكُم وَإِيَّايَ بِتَقوَى اللهِ عَزَّ وَجَلَّ، فَقَد فَازَ المُتَّقُونَ.**

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் அஜ்ஜ வஜல்ல, மீதான நமது "தக்வா" பக்தியை சிறப்பாக்கிக் கொள்வோமாக! "தக்வா" தான், நமது ஆன்மாவை வரம்பு மீறி நடத்தல் மற்றும் பாவங்களிலிருந்து பரிசுத்தமாக்கும். கஷ்டங்களை எதிர்கொள்ளும் போது சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்ற நமது தீர்மானத்தை பலப்படுத்தும். அல்லாஹ்வின் படைப்புகளுக்கு நன்மையைச் செய்வதற்கும் அவர்களுக்கு மத்தியில் நல்லெண்ணத்தைப் பரப்புவதற்கும் நம்மை நிர்ப்பந்திக்கும்.

எனது அன்பிற்குரிய சகோதரர்களே!

அறிந்துகொள்ளுங்கள்! பூமியில் வாழும் நாம் இரண்டு விஷயங்களைத் தவிர்க்க முடியாது. ஒன்று, அல்லாஹ்வின் புறத்திலிருந்து நமக்கு அருளப்பட்டு வரும் "நி ்மத்" எனும் அருட்கொடைகள் ஆகும். அவற்றை வழங்கியதற்காக அல்லாஹ்வுக்கு நாம் நன்றி செலுத்துவதும் அல்லாஹ்வை நாம் திருப்திபடுத்துவதும் அவசியமாகும். இரண்டாவது, அல்லாஹ்வின் புறத்திலிருந்து நமக்கு ஏற்படுத்தப்படும் சோதனைகள் ஆகும். அவற்றை பொறுமை, நம்பிக்கை மற்றும் அல்லாஹ்வின் நற்கூலிகளுக்காக ஏங்கி நிற்கும் நமது உணர்வுகள் ஆகியவற்றின் மூலம் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று, உலகம், வைரஸ் கிருமிகளுக்கு எதிராக இன்னும் தொடர்ந்து போராடி வருகிறது. இப்பிரச்சனை நமக்கு மத்தியில் கவலைகளும் மனவேதனைகளும் ஏற்படுதற்குக் காரணமாக உள்ளது. நாம் ஓரிறை நம்பிக்கையாளர்கள் எனும் ரீதியில், நமக்கு எது ஏற்பட்டாலும் அது அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஏற்படுத்தப்படும் சோதனை என்றே நாம் உறுதியாக நம்புகிறோம். நம்மை நாம் முன்னேற்றிக் கொள்ளவும், அல்லாஹ்விடம் வருந்தி, பாவமன்னிப்புத் தேடவும், பொறுமையுடன் இருப்பதற்கும், உலகில் நன்மையை நாம் தொடர்ந்து பரப்புவதற்கும் இது போன்ற சோதனைகள் நமக்கு ஏற்படுத்தப்படுகின்றன. அல்லாஹ், திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَلَنَبْلُوَنَّكُم بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوعِ وَنَقْصٍ مِّنَ الْأَمْوَالِ
وَالْأَنفُسِ وَالثَّمَرَاتِ ۗ وَبَشِّرِ الصَّابِرِينَ ﴿١٥٥﴾ الَّذِينَ إِذَا
أَصَابَتْهُم مُّصِيبَةٌ قَالُوا إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ ﴿١٥٦﴾

பொருள்: நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடன் இருப்போருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!

(பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, ”நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்” என்று கூறுவார்கள். (அத்தியாயம்: அல்-பகரா, வசனங்கள்: 155-156)

ஓரிறை நம்பிக்கையானது பொறுமையை உருவாக்குகிறது. சுய கட்டுப்பாட்டின் உணர்வு பொறுமையின் மூலம் கிடைக்கும் பலனாகும். எனவே, நமது உள்ளங்களைப் பரிசுத்தமாக்கிக் கொள்வோமாக! அல்லாஹ்விடம் திரும்பி, அவனிடம் வருந்தி, நமது பாவத்துக்கான மன்னிப்பைக் கேட்பதன் மூலமாக இக்கஷ்டமான காலங்களில் அல்லாஹ்வுடனான நமது உறவை மீண்டும் உறுதியாக்கிக் கொள்வோமாக! குறிப்பாக, புனிதமிக்க இந்த ரஜப் மாதத்தில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து, அவனது அருளைப் பெறுவோமாக!

அல்லாஹ், திருக்குர்ஆனில் கூறுகிறான்:

(நபியே!) நீர் அவர்களிடையே இருக்கும் வரையிலும் அல்லாஹ் அவர்களை வேதனை செய்யமாட்டான்; மேலும் அவர்கள் பாவமன்னிப்பைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதும் அல்லாஹ் அவர்களை வேதனை செய்பவனாக இல்லை. (அத்தியாயம்: அல்-அன்ஃபால், வசனம்: 33)

இஸ்லாம், நமது ஆன்மாக்களைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென நமக்குப் போதிப்பதுடன், நமது உடலையும் தொடர்ந்து சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமெனவும் போதிக்கிறது. உண்மையில், உடலை சுத்தமாக வைத்துக் கொள்வது நமது மார்க்கத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். எனவே, நமது வாழ்வில் ஏற்படும் சோதனைகளையும் இன்னல்களையும் அறிவுப்பூர்வமாகவும் நியாயமாகவும் எதிர்கொள்ள முற்படுவோமாக! அவ்வாறே, வேறு எவ்வித பிரச்சனையை அல்லது கஷ்டமான சூழ்நிலையை நாம் எதிர்கொண்டாலும் அவற்றை வெற்றிகொள்வதற்காக, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இஸ்லாம் நமக்குப் போதிக்கிறது.

அண்மையில் மிகப் பெரிய அளவில் ஏற்பட்டுள்ள வைரஸ் கிருமிகள் வித்தியாசமின்றி அனைவரிடமும் பரவி வருகிறது. வைரஸ் பரவாமல் கட்டுப்படுத்துவது நம் அனைவரின் கடமையாகும். தனிப்பட்ட மற்றும் பொதுநலம், சுகாதாரம் சம்பந்தமான விஷயங்களில், பள்ளிவாசல்களில் ஒன்று கூடும் ஜமாத்தார்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துமாறும், ஜமாஅத்தார்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் உபதேசம் செய்பவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இதன் மூலம் நாம்

பொதுநலனுக்குத் தொடர்ந்து பங்காற்றலாம். நமது மார்க்க நிறுவனங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் தொடர்ந்து நன்றாகச் செயல்படவும் இது உதவியாக இருக்கும்.

எனது சகோதரர்களே! நமது ஒவ்வொரு முயற்சியையும் நமது உடல் மற்றும் ஆன்மாவைச் சுத்தமாக்குவதன் பால் செலுத்துவோமாக! இதுதான், வைரஸுக்கு எதிரான நமது போரில் சிறந்த ஆயுதமாகும். நமது முயற்சிகளும், செயல்களும், நமது உளத்தூய்மையும், ஒருவருக்கொருவர் கிருபை காட்டிக் கொள்ளும் உயிரோட்டமும் இச்சோதனையை நாம் வெல்வதற்கு உதவியாக இருக்கும். அனைத்து வகையான குழப்பங்கள் மற்றும் சோகங்களை விட்டும் நம்மையும் மனிதகுலத்தையும் பாதுகாக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்கிறோம். அவ்வாறே, அல்லாஹ் விரும்பும் பாதையை அவன் நமக்குக் காட்ட வேண்டுமெனவும் வேண்டிக் கொள்கிறோம். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.